# Yoga Strengthens the Mind and Body!
# (22.6.2024)



# மனதையும் உடலையும் வலிமைப்படுத்தும் யோகா!

## பள்ளி, கல்லூரிகளில் யோகா தினம் கொண்டாட்டம்

ஜி.வி.ஜி. கல்லூரியில் என்.சி.சி., மாணவியர் யோகாசனம் செய்தனர். ■ கோமங்கலம்புதூர் வித்யநேத்ரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி.

**உடுமலை, ஜூன் 22-** சர்வதேச யோகா தினத்தையொட்டி, உடுமலை சுற்றுப்பகுதி பள்ளி, கல்லூரி, நிறுவனங்கள், தனியார் அமைப்புகளிலும் யோகா பயிற்சி செய்தனர்.

உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் நடந்த, யோகா தின நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) பரமேஸ்வரி தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில், கல்லூரி தேசிய மாணவர் படையைச்சேர்ந்த, 60 மாணவியர், விசாலாட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த, 62 மாணவியரும் பங்கேற்று யோகாசனம் செய்தனர்.

- உடுமலை எஸ்.கே.பி., மேல்நிலைப்பள்ளி நிர்வாகம் மற்றும் திருமூர்த்தி நகர் உலக சமாதான ஆலய அறக்கட்டளை இணைந்து நிகழ்ச்சியை நடத்தினர். நிகழ்ச்சியில் நகராட்சி தலைவர் மத்தீன் தலைமை வகித்தார். பள்ளி தலைமையாசிரியர் பூரணி வரவேற்றார்.
- குறிச்சிக்கோட்டை ஆர்.வி.ஜி., மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், மூன்று நாட்கள் மாணவர்களுக்கு சிறப்பு யோகா பயிற்சி வழங்கப்பட்டது. கோவை ஈஷா யோக மையத்தின் சான்று பெற்ற பயிற்சியாளர்கள், மாணவர்களுக்கு ஆசனங்களை கற்பித்தனர். பயிற்சியில் பள்ளி தாளாளர் ஜூலியா மற்றும் ஆசிரியர்களும் பங்கேற்றனர்.
- கோமங்கலம்புதூர் வித்யநேத்ரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், யோகா தினம் கொண்டாடப்பட்டது. மாணவர்கள் பள்ளி வளாகத்தில் பல்வேறு ஆசனங்களை செய்தனர்.
- சின்னவீரம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில், தலைமையாசிரியர் இன்பகனி தலைமை வகித்தார். தொடர்ந்து மாணவர்கள் பல்வேறு ஆசனங்களை செய்தனர்.
- பூலாங்கிணர் அரசு மேல்நிலைப்பள்ளியில், நாட்டுநலப்பணி திட்டத்தின் சார்பில் யோகா தினம் கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியர் கணேசன் தலைமை வகித்தார். நாட்டுநலப்பணி திட்ட அலுவலர் சரவணன் வரவேற்றார்.
- புங்கமுத்தூர் காந்தி கலா நிலையம் மேல்நிலைப்பள்ளியில், ஆசிரியர் மகேந்திரபாபு மாணவர்களுக்கு யோகாவின் பயன்பாடுகள் குறித்து பேசினார்.
- அமராவதிநகர் சைனிக் பள்ளியில் நடந்த யோகா நிகழ்ச்சியில், பள்ளி நிர்வாகத்தினரும் பங்கேற்றனர். பள்ளி மைதானத்தில் கேடட்கள் மற்றும் அனைத்து பணியாளர்களும் இணைந்து யோகாசனங்களை செய்தனர்.

உடுமலை மலையாண்டிபட்டிணம் அரசு உயர்நிலைப்பள்ளியில், மாணவர்களுக்கு யோகா பயிற்சி வழங்கப்பட்டது. சாய் யோகா அமைப்பின் யோகா ஆசிரியர் காளிமுத்து மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார். பள்ளி தலைமையாசிரியர் சதீஸ்குமார் தலைமை வகித்தார்.

- உடுமலை மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை சார்பில் அரசு பள்ளிகள், அரசு கலைக்கல்லூரி மற்றும் தனியார் பள்ளிகளில் யோகாபயிற்சி வழங்கப்பட்டது. தவிர, போலீஸ் துறையினர் மற்றும் பேராசிரியர்களுக்கு, உடுமலை தேஜஸ் அரங்கில் யோகா பயிற்சி அளிக்கப்பட்டது.
- உடுமலை நகர பா.ஜ., சார்பில், யோகா தின நிகழ்ச்சி ஐ.எம்.ஏ., அரங்கில் நடந்தது. உடுமலை நகரத்தலைவர் கண்ணாயிரம் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் தியானம், மூச்சுப்பயிற்சி, சர்வங்காசனம் உள்ளிட்ட யோகாசனங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.
- மடத்துக்குளம் வட்ட சட்டப்பணிகள் குழுவின் சார்பில், மடத்துக்குளம் நீதிமன்ற வளாகத்தில் யோகா பயிற்சி வகுப்பு நடந்தது. நிகழ்வில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் விஜயகுமார், வக்கீல்கள், நீதிமன்ற பணியாளர்கள் பங்கேற்றனர்.
- உடுமலை வட்டசட்டபணிகள் குழுவின் சார்பில், உடுமலை சார்பு நீதிமன்ற வளாகத்தில் யோகா பயிற்சி நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட உரிமையியல் நீதிபதி பாலமுருகன், குற்றவியல் நீதித்துறை நடுவர் நித்யகலா, வக்கீல்கள், நீதிமன்ற பணியாளர்கள் உள்ளிட்டோர் பயிற்சி பெற்றனர். உடுமலை அரசு மருத்துவமனை மருத்துவர் ராகவேந்திர சுவாமி யோகாசனம் பயிற்சி அளித்தார்.

# Students Induction Programme (8.7.2024)



உடுமலை ஜி.வி.ஜி. கல்லூரியில்

## முதலாமாண்டு மாணவிகளுக்கு வழிகாட்டும் பயிற்சி

உடுமலை, ஜூலை.8–

உடுமலை ஜி.வி.ஜி.மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, பெண்களுக்கான சமூக நலத்திட்டங்கள் பற்றிய கருத்தரங்கு மற்றும் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு கல்லூரியின் இயக்குனர் மற்றும் ஆலோசகர் ஜெ.மஞ்சுளா முன்னிலை வகித்தார். முதல்வர் (பொறுப்பு) இரா.பரமேஸ்வரி தலைமை தாங்கினார்.

அதில் பெண் கல்வி, பெண்கள் பாதுகாப்பு மற்றும் சமூக நலத்திட்டங்கள் பற்றிய அறிவுரைகளை சமூக நலன் மற்றும் பெண்கள் பாதுகாப்பு துறையை சேர்ந்த சந்தோஷ் வழங்கினார். சாலை போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வை போக்குவரத்து சப்–இன்ஸ்பெக்டர் கண்ணன் வழங்கினார். வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சி கல்வி, மனதின் திறவுகோல், கல்வியின் முக்கியத்துவம் குறித்த பயிற்சிகள் எண்ணம் போல் வாழ்க்கை அறக்கட்டளையின் நிறுவனர் எஸ்.ஏ.ஐ.நெல்சன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் 100–க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி ஒருங்கிணைப்பாளர் இரா.வானமாதேவி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் இணைந்து செய்தனர்.

# Student Union Election

14 • Dinakaran • Kovai • 18.7.2024

## உடுமலையில் மகளிர் கல்லூரியில்

# மாணவர் பேரவை தேர்தல்

உடுமலை, ஜூலை 18: உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் மாணவர் பேரவை தேர்தல் இணைய வழியில் நடைபெற்றது.

97 மாணவிகள் கல்லூரி பேரவை மாணவர் தலைவி, மாணவச் செயலர், துணை செயலர் மற்றும் பல்வேறு மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் துணை செயலாளர்கள் பதவிக்கு போட்டியிட்டனர். அவர்களை தேர்ந்தெடுப்பதற்கான இணைய வழித் தேர்தலில் இளங்கலை இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மற்றும் முதுகலை இரண்டாமாண்டு பயிலும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் தங்களது வாக்குகளை பதிவு செய்தனர்.

இதைத் தொடர்ந்து வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் முதல்வர் (பொறுப்பு) கி.பரமேஸ்வரி, கல்லூரி பேரவையின் ஒருங்கிணைப்பாளர் எம். கலாவதி மற்றும் தேர்தலில் போட்டியிட்ட மாணவிகளுக்கு முன்பு வெளியிடப்பட்டது. கல்லூரி மாணவர் பேரவைத் தலைவியாக பி.ஜேன்கிரிஸி கேத்ரின், (மூன்றாமாண்டு ஆங்கில இலக்கியம்), செயலராக எஸ். அங்கிதா சுபஸ்ரீ (மூன்றாமாண்டு கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு), துணை செயலாளராக ஏ.முனவரா பர்வீன் (மூன்றா மாண்டு வணிகவியல்) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கல்லூரியின் செயலர் ஸ்ரீமதி கிருஷ்ண பிரசாத், இயக்குனர் மற்றும் ஆலோசகர் ஜெ.மஞ்சுளா, முதல்வர் ஆர்.பரமேஸ்வரி மற்றும் ஆசிரியர்களும் வாழ்த்துகளை தெரிவித்தனர். தேர்தல் ஏற்பாடுகளை வணிகவியல் துறை இணை பேராசிரியரும், கல்லூரி பேரவையின் ஒருங்கிணைப்பாளருமான எம். கலாவதி மற்றும் பேரவை உறுப்பினர்கள் செய்திருந்தனர்.



உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் மாணவர் பேரவை தேர்தல் இணைய வழியில் நடைபெற்றது.

# Student Union Election

## மாணவர் பேரவை தேர்தல் இணைய வழியில் ஓட்டுப்பதிவு

**உடுமலை, ஜூலை 20–**

உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், மாணவர் பேரவைத்தேர்தல் நடந்தது.

உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், மாணவர் பேரவைத்தேர்தல் இணையவழியில் நடந்தது. இத்தேர்தலில், இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகளில் படிக்கும், 97 மாணவியர் போட்டியிட்டனர்.

இளநிலை இரண்டு மற்றும் மூன்றாமாண்டு, முதுநிலை இரண்டாமாண்டு படிக்கும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவியர், இணையவழியில் ஓட்டுப்பதிவு செய்தனர்.

மாணவியர் பேரவை தலைவர், செயலாளர், துணைச்செயலாளர் மற்றும் பல்வேறு மன்ற செயலாளர்கள், துணைச்செயலாளர்களை தேர்ந்தெடுத்தனர்.

ஓட்டுப்பதிவின் இறுதியில், அதிக ஓட்டுகள் பெற்று தலைவராக, இளநிலை மூன்றாமாண்டு ஆங்கில இலக்கிய பிரிவைச்சேர்ந்த ஜேன் கிரிஸி கேத்ரின், செயலாளராக, இளநிலை கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூன்றாமாண்டைச்சேர்ந்த சுபஸ்ரீ,

மாணவ துணைச்செயலாளராக மூன்றாமாண்டு வணிகவியல் துறை மாணவி முனவரா பர்வீன் மற்றும் மன்ற செயலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


தேர்தலில் வெற்றி பெற்ற மாணவியருக்கு, கல்லூரி செயலாளர் சுமதி, இயக்குனர் மஞ்சுளா, கல்லூரி முதல்வர் பரமேஸ்வரி மற்றும் ஆசிரியர்கள் பாராட்டு தெரிவித்தனர்.



உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் நடந்த, மாணவர் பேரவை தேர்தலில் ஓட்டுப்பதிவு செய்த மாணவியர்.

# Investiture Ceremony (24.7.2024)

# ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் பேரவை, மன்றங்கள் தொடக்கம்




**மாணவப் பேரவை நிர்வாகிகளுக்கு பதவிப் பிரமாணம் செய்துவைக்கிறார் கோவை பாரதியார் பல்கலைக்கழகப் பதிவாளர் ரூபா குணசீலன்.**

**உடுமலை, ஜூலை 24:** உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் பேரவை மற்றும் பல்வேறு மன்றங்களின் தொடக்க விழா புதன்கிழமை நடைபெற்றது.

கல்லூரி செயலர் சுமதி கிருஷ்ணபிரசாத் தலைமை வகித்தார். இயக்குநர் மற்றும் ஆலோசகர் ஜெ.மஞ்சுளா, கல்லூரி முதல்வர் ஆர்.பரமேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாணவப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் எம்.கலாவதி வரவேற்றார். மாணவப் பேரவைத் தலைவி பி.ஜேன் கிறிஸ்ஸி கேத்தரின் அறிக்கை வாசித்தார். கோவை பாரதியார் பல்கலைக்கழகப் பதிவாளர் ரூபா குணசீலன் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

நிகழ்ச்சியில், ஆங்கில மொழியை மாணவிகள் திறம்பட கற்கவும், இலக்கணம் அறிந்து அச்சமின்றி பேசவும், எழுதவும் ஷைலஷ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேலும், தேசிய அளவில் நடைபெற்ற துப்பாக்கி சுடும் போட்டியில் முதலிடம் பிடித்த மாணவி வி.பிரீத்தி கௌரவிக்கப்பட்டார். மாணவி எஸ்.அங்கிதா சுபஸ்ரீ நன்றி கூறினார்.

# Honoring the

# National Level Achiever

# (27.7.2024)

## தேசிய துப்பாக்கி சுடும் போட்டி வென்ற மாணவிக்கு பாராட்டு

**உடுமலை, ஜூலை 27–**

உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் மாணவர் பேரவைத்தேர்தல் நடந்தது. இதையொட்டி புதிய நிர்வாகிகள் பதவியேற்பு மற்றும் மன்றங்கள் துவக்க விழா கல்லூரி அரங்கில் நடந்தது.

மாணவர் பேரவை ஒருங்கிணைப்பாளர் கலாவதி வரவேற்றார். கல்லூரி செயலாளர் சுமதி தலைமை வகித்தார். ஆலோசகர் மஞ்சுளா முன்னிலை வகித்தார்.

கோவை பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) ரூபா, 'வாழ்வியல் அறம்' குறித்து பேசினார். மாணவர் பேரவை தலைவராக ஜேன் கிறிஸ்ஸிகேத்தரின் அறிக்கை வாசித்தார்.

கல்லூரி பேரவை பொறுப்பாளர்களான மாணவியருக்கு உரிய சின்னங்கள் வழங்கப்பட்டன. கல்லூரி பொறுப்பு முதல்வர் பரமேஸ்வரி, மாணவியருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். மாணவியர் உறுதிமொழி ஏற்றனர். மாணவியருக்கான ஆங்கில பயிற்சி அளிப்பதற்கு, ஷைலம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

தேசிய அளவில் நடந்த துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற, தேசிய மாணவர் படை மாணவி பீரித்திக்கு பதக்கம் வழங்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது. மாணவி அங்கிதா நன்றி தெரிவித்தார்.

# National Seminar (1.8.2024)



## உடுமலை ஜி.வி.ஜி. கல்லூரியில்

# தேசிய கருத்தரங்கம்

உடுமலை, ஆக.1–

உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகம் நிதியுதவியுடன் பொருளாதாரத் துறையின் சார்பாக தேசிய அளவிலான 2 நாள் கருத்தரங்கம் நடை பெற்றது. மகளிர் மேம்பாடு முழுமைய்யான பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றது என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கிற்கு கல்லூரியின் செயலர் சுமதி கிருஷ்ணப் பிரசாத் முன்னிலை வகித்தார். இயக்குனர் மற்றும் ஆலோசகர் ஜெ.மஞ்சுளா தலைமை உரையாற்றினார். முதல்வர் ஆர்.பரமேஸ்வரி (பொறுப்பு) தொடக்க உரையாற்றினார். பொருளாதாரத்துறை தலைவர் முனைவர் பி.கீதா வரவேற்றார்.கர்நாடகா பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆர்.செல்வி முதன்மை உரையாற்றினார். முதல் நாள் கருத்தரங்கில் பயிற்று வல்லுநர்களாக பி.கண்ணன், எ.சரவணன், ஜெ.ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர். முடிவில் பொருளாதாரத் துறையின் இணை பேராசிரியர் கே.காளியம்மாள் நன்றியுரை ஆற்றினார். 2–ம் நாள் நிகழ்ச்சியில் கப்ப கொண்டல், பி.ராஜேஷ் குமார்,எம்.சத்தியவாணி ஆகியோர் பயிற்று வல்லுனர்களாக கலந்து கொண்டனர்.

டெல்லி, உத்தரகாண்ட், அசாம், குஜராத், கர்நாடகா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். இணையவழியில் 60 கட்டுரைகளும், நேரடியாக 25 கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டது. கருத்தரங்க நிறைவு விழாவில் எஸ்.ஸ்ரீபிரியா வரவேற்றார். கே.மங்கையர்க்கரசி சிறப்புரையாற்றினார். முடிவில் ஆர்.ரஜினி நன்றி கூறினார்.

# Poetry Competition (10.8.2024)

தினகரன் திருப்பூர்

## சூழலியல் கவிதைப்போட்டியில் பங்கேற்றவர்களுக்கு மரக்கன்று பரிசு



▸ உடுமலையில் உள்ள தனியார் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சூழலியல் கவிதைப்போட்டியில் பங்கேற்ற மாணவிகள், ஆசிரியர்கள்.

உடுமலை, ஆக. 10: உடுமலை தனியார் மகளிர் கல்லூரியில் பசுமைக்குரல் பொதுநல அறக்கட்டளையின் சார்பாக இயற்கை சார்ந்த சூழலியல் கவிதைப்போட்டி நடைபெற்றது.

இதில், பங்கேற்ற மாணவிகளுக்கு திரைப்பட பாடலாசிரியர் பழநிபாரதி கையொப்பமிட்ட சான்றிதழ்கள் மற்றும் மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் கல்லூரியின் இயக்குனர் ஜெ.மஞ்சுளா முன்னிலை வகித்தார். முதல்வர் (பொறுப்பு) ஆர்.பரமேஸ்வரி தலைமை தாங்கினார்.

நம் பசுமைக்குரலின் அழைப்பின் பேரில் சிறப்பு விருந்தினர்களாக 'கஜராஜா கலீம் தாத்தா' நூலின் ஆசிரியர் எழுத்தாளர் இளம் கவி யோகேஸ்வரன், சென்னை கூத்துப்பட்டறை அமைப்பைச் சார்ந்த சுரேஷ்வரன், நிவேதிதா சுரேஷ்வரன், பசுமைக்குரல் பொதுநல அறக்கட்டளை அறங்காவலர் மகேந்திரன், பசுமைக்குரல் உறுப்பினர் கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கவிதைப்போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர். இளங்கலை தமிழ் இலக்கியம் மூன்றாம் ஆண்டு பயிலும் செல்வி எஸ்.அபினயதர்ஷினிக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர் சுரேஷ்வரன், நவீன கவிதைகள் குறித்தும், படைப்பாற்றலை வளர்த்து கொள்வதற்கான உத்திகள் குறித்தும் பேசினார். பசுமைகுரல் அறங்காவலர் மகேந்திரன் பசுமையை பாதுகாப்பதற்கான மாணவர்களின் பங்களிப்பு குறித்து பேசினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கணினி பயன்பாட்டு துறைத்தலைவர் மணிமேகலை, துறை பேராசிரியர்கள், சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் கோமதி ஆகியோர் செய்திருந்தனர்.

# Poetry Competition (8.8.2024)



## உடுமலை ஜி.வி.ஜி. கல்லூரியில் கவிதைப் போட்டி

உடுமலை, ஆக.8-

உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் இயற்கை சார்ந்த சூழலியல் கவிதைப் போட்டி நடைப்பெற்றது. கல்லூரியின் இயக்குனர் மற்றும் ஆலோசகர் ஜெ.மஞ்சுளா முன்னிலை வகித்தார். முதல்வர் ஆர்.பரமேஸ்வரி (பொறுப்பு) தலைமை தாங்கினார். போட்டியில் பங்கேற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்கள், மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இளங்கலை தமிழ் இலக்கியம்-மூன்றாம் ஆண்டு மாணவி எஸ்.அபினய தர்ஷினிக்கு சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது. நவீன கவிதைகள் குறித்தும், படைப்பாற்றலை வளர்த்துக் கொள்வதற்கான உத்திகள் குறித்தும், பசுமையை பாதுகாப்பதற்கான மாணவர்களின் பங்களிப்பு குறித்தும் சிறப்பு விருந்தினர் பேசினார். இதில் சிறப்பு விருந்தினர்களாக சுரேஷ்வரன், நிவேதிதா சுரேஷ்வரன், இளம்கவி யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கணினி பயன்பாட்டுத் துறைத் தலைவர் கே.மணிமேகலை, துறை பேராசிரியர்கள் சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் ஆர்.கோமதி ஆகியோர் செய்[illegible]னர்.

# Honoring the

# National Level Achiever

## தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில்

## தங்கப்பதக்கம் வென்ற மாணவிக்கு பாராட்டு



**உடுமலை, ஆக. 15:** தேசிய அளவில் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற உடுமலை ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி மாணவி பிரீத்திக்கு பாராட்டு விழா கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் பரமேஸ்வரி தலைமை வகித்தார். செயலர் சுமதி கிருஷ்ணபிரசாத் முன்னிலை வகித்தார். தேசிய மாணவர் படை அதிகாரி கேப்டன் கற்பகவள்ளி வரவேற்றார். இயக்குனர் மற்றும் ஆலோசகர் மஞ்சுளா சிறப்புரையாற்றினார்.

தேசிய அளவில் பரிசு பெற்று கல்லூரிக்கு சிறப்பு சேர்த்த 3ம் ஆண்டு ஆங்கில இலக்கியம் பயிலும் மாணவி பிரீத்திக்கு கல்லூரிக் கட்டணம், விடுதிக்கட்டணம், உணவுக் கட்டணம் போன்றவை முற்றிலும் இலவசமாக கல்லூரி நிர்வாகத்தினரால் வழங்கப்படும் என்பதை செயலர் அறிவித்தார். இதில் 5 டிஎன் கேர்ள்ஸ் பட்டாலியன், கமாண்டிங் அதிகாரி ஜோஷி கலந்து கொண்டு மாணவி பிரீத்தியையும், கேப்டன் கற்பகவள்ளியையும் பாராட்டினார்.

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான துப்பாக்கிச் சுடும் போட்டியில் பங்கேற்று தங்கப்பதக்கம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை தேடித் தந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உயர் கல்வித்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு தேசிய மாணவர் படை தலைவர் ஆகியோர் பிரீத்தியை சென்னைக்கு அழைத்து பாராட்டு தெரிவித்தனர். இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை வரலாற்று துறையின் இணைப்பேராசிரியரும், தேசிய மாணவர் படை அலுவலருமான கேப்டன் கற்பகவள்ளி செய்திருந்தனர்.

# Independence Day Celebration (15.8.2024)



▪ ஜி.வி.ஜி., விசாலாட்சி கல்லூரியில் மாணவியரின் அணிவகுப்பு.

▪ உடுமலை அனுகிரகா பள்ளி.

▪ பூலாங்கிணர் அரசு மேல்நிலைப்பள்ளி.

▪ அமராவதிநகர் சைனிக் பள்ளி.

▪ ஆர்.கே.ஆர்., கிரிக்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி.

## பள்ளி, கல்லூரிகளில் சுதந்திர தின விழா கொண்டாட்டம்

### அணிவகுப்பு, மரகன்றுகள் நடப்பட்டன

**உடுமலை, ஆக. 16–** உடுமலை பள்ளி, கல்லூரிகள், அரசு நிறுவனங்கள், பல்வேறு சங்கங்களில் 78ம் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.